






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 35 27.08.2025

## ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:



# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய

## முத்துக்கள்

## உபதேசங்கள்






ApankaAiNews
Jaya Krishna
Mukuntha Murare

# முத்துக்கள்

1. ஸந்த்யாவந்தனத்தை பிரமன் விஷ்ணு சிவன் எல்லோரும் செய்கிறார்கள். அப்படியிருக்க நன்மையை க்ஷேமத்தை விரும்பும் அந்தணர் முதலியோர் ஸந்த்யா வந்தனத்தைச் செய்யாமலிருக்க முடியுமா? மஹர்ஷிகள் நீண்ட காலம், காலம் தவறாது முறைப்படி ஸந்த்யாவந்தனத்தை அனுஷ்டித்ததினால் நீண்ட ஆயுளையும், நல்ல நிலையையும், பல்வகைப் புகழையும், ப்ரஹ்மதேஜஸ்யையும் பெற்றனர். ஐந்து நாட்கள் இடைவிடாது காயத்ரியை ஜபம் செய்வதால் இப்பிறவியிலும் முற்பிறவிகளிலும் செய்த பாபங்கள் அனைத்தும் அகலும், பாபங்களைப் போக்குவதில் காயத்ரிக்கு நிகரான மந்த்ரமே கிடையாது. 'சந்தி செய்யாதவன் தூய்மையற்றவன்; பிற கர்மாக்களைச் செய்யத் தகுதியை இழந்தவன்' என்ற ப்ரமாணங்கள் தெரிவிக்கின்ற படியால் ஸந்த்யோபாஸனத்திற்காகத் துயில் எழுப்புகிறார். அல்லது உதயமாகும் ஸூரியன் எதிரியான இருளை விரட்டுவதுபோல் ஸாதுக்களின் எதிரிகளான அரக்கர்களை ஒழிக்கும் காலம் நெருங்குகிறது எனக் குறிப்பால் உணர்த்துகிறார் போலும்; அல்லது யான் இன்றுவரை தத்வ ஸாக்ஷாத்காரமின்றி அறியாமையாம் இருளில் உழன்றேன். இப்பொழுதோ ஞானத்தில் தவத்தின் பயனாகிய உம்மைக் கண்டு பகவத் ஸாக்ஷாத்காரத்தைப் பெற்றேன். "அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன்" என்றபடியான ஞான ஸூர்யத்தை அளிக்கும் பூர்வாஸந்த்யா விடிவுவேளை எனக்கு என தன்னைக் குறித்துப் பேசியபடியாம்.

*******************************************************

2. உண்மையில் பரதாழ்வான்தான் பாதுகையின் பெருமைகளை உலகுக்கு உணர்த்தியவர்; அவர் இல்லாவிட்டால், யாருக்கும் தெரியாமலே போயிருக்கும்: நாமெல்லாம் சடாரி சாதித்துக் கொண்டு, பலன் பெறுவதற்கு வழிகாட்டி அவர்தானே! நாமெல்லாம் ஆசார்ய பாதுகைகளை ஆராதனம் செய்து, ஸ்ரீபாததீர்த்தம் வாங்க உய்ய வழி வகுத்தவர் ஸ்ரீபரதாழ்வான்தான்!

*******************************************************

3. எல்லாப்பொருள்களும் பரமாத்மாவுக்கு உடல் (சரீரம்) ஆகும். எல்லாப் பொருள்களுக்குள்ளும் ஆத்மாவாக உள் இருந்து கொண்டு வழி நடத்துபவர் பரமாத்மா. அவர்தான் ப்ரஹ்மமான ஸ்ரீமந்நாராயணன்.

**********************************************************

4. ஸகலஜீவராசிகளும் எம்பெருமானின் சரீரம். எம்பெருமானுக்குப் பணிவிடை செய்வதே நம் கடமை.

**********************************************************

5. ஒரு சேதனனால் செய்யப்பட்ட பாபங்கள் எவ்வளவு அதிகமாகயிருந்தாலும் ஒரு ஸதா சார்யனுடைய அனுக்ரஹம் உண்டானால் அதன் பயனாக அவ்வெல்லாபாபங்களும் நசித்துவிடும். ஆசார்யனுடைய திருவடிகளில் பரஸமர்ப்பண த்தை செய்துவிடவேண்டும். அவர் தான் சிற்றின்ப வழியில் சென்று கொண்டிருக்கும் சேதனனது மனதை பரிபக்குவமான வழியில் திருப்பிச் செலுத்துவார்.

**********************************************************

6. உலகத்தில் மூன்று தாபங்கள் தாபத்ரயம் பொறுக்க முடியாதவை. அவைகளால் ஜனங்கள் கஷ்டப் படுகிறார்கள்.

1. ஆதியாத்மிக - சரிரத்திலும் மனதிலும் ஏற்படக் கூடிய வியாதிகள்

2. ஆதிபௌதிகம் - சுற்றுப் புறங்களில் இருக்கும் மனிதர்கள், ம்ருகங்கள், பக்ஷிகள், பேய், பிசாசுகள், பாம்புகள், ராக்ஷஸர்கள், கொசு, ஈ, எறும்பு, தேள் போன்றவற்றால் ஏற்படக்கூடிய ச்ரமங்கள்

3. ஆதிதைவிகம் - குளிர் காற்று, வெயில், மழை, பூகம்பம் வெள்ளம், மின்னல், இடி போன்றவைகளால் ஏற்படக்கூடிய ச்ரமங்கள்.

**********************************************************

7.அஷ்டாக்ஷர மந்திரத்தால் அறியப்படும் பொருள் ஒன்பது:

1. ஈச்வர ஈச்வரன் நமக்குப்பிதா
2. அவனே ரக்ஷகன்
3. அவனே சேஷி
4. அவனே லக்ஷ்மீபதி
5. அவனே ஸ்வாமி
6. அவனே நமக்கு ஆதாரம்,
7. எனக்கும் அவனே உயிர்

8. ஸகல போகங்களையும் அநுபவிப்பவன்
9. அவனே நமக்கு பர்தா என்று
இதனால் நமக்கும் இறைவனுக்கும் ஒன்பது விதமான ஸம்பந்தம் உள்ளது என்பது ஏற்படுகிறது.
*******************************************************

## 8.மூன்று ரஹஸ்யங்கள்

திருமந்திரம் – த்வயம்- சரமசுலோகம் ஆகிய மூன்று ரஹஸ்யங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. அவற்றுள் சரமசுலோகம் ப்ரபத்தியைச் செய்யுமாறு விதிக்கின்றது. த்வயம் அந்த ப்ரபத்தியின் ஸ்வரூபம் முதலியவற்றைத் தெளிவாகக் கூறுகின்றது. திருமந்திரம் த்வயத்தில் உள்ள அர்த்தங்களுக்கு அவசியம் வேண்டிய அம்சங்களைச் சுருக்கிக் கூறுகின்றது. அவற்றின் விளக்கம் வருமாறு:-

### சரம சுலோகம்

எல்லார்க்கும் அடைக்கலமாயுள்ள ச்ரிய: பதியான கண்ணன் தானே சரமசுலோகத்தில் சேதநனை நோக்கிப் பின்வருமாறு கூறுகின்றான் - " நீ இந்த ஸம்ஸார மண்டலத்தில் மிகுத்த துன்பத்தை அடைந்துள்ளாய். இந்நிலையில் செய்வதற்கு மிகக் கடினமான உபாயம் எதையும் நீ செய்து சிரமப்பட வேண்டாம். உன்னிடம் உள்ள பாபங்கள் அனைத்தையும் ஒழிக்கச் சக்தியுடையவன் நான். ஆனால் அதற்குச் சமயத்தை எதிர் பார்த்து நிற்கின்றேன். இத்தகைய என்னை ஒருவனையே உபாயமாக நீ பற்ற வேண்டும். " என்று.

### த்வயம்

கீழ் சொன்ன சரணாகதியைச் செய்ய எல்லாச் சாதியாருக்கும் தகுதியுண்டு. த்வயம் இந்தச் சரணாகதி யாரைப் பற்றியது? அவருக்கு உள்ள விசேஷம் யாது? இந்த ப்ரபத்தியின் உருவம் எது? அதில் உள்ள விசேஷம் என்ன? இதன் அங்கங்கள் யாவை? அவற்றில் உள்ள விசேஷம் யாது? இந்த ப்ரபத்தியால் வரும் பயன் யாது? அப்பலனில் உள்ள விசேஷம் என்ன?" என்ற விசேஷங் களையெல்லாம் தெளிவாய்க் காட்டுகின்றது.

*******************************************************